16-7-1991

## ★ ஆனையிறவில் புலிகளுக்கே வெற்றி வாய்ப்பு!

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 32 இதழ்: 155
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-7-1991

## பி. பி. ஸி. கணிப்பு

(லண்டன்)
ஆனையிறவு முகாமைச்சுற்றி புலிகள் மிகப்பலமான நிலையிலிருப்பதால் இம்முகாம் புலிகளிடம் விழக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி. மேலும் தெரிவித்ததாவது:-

(4ம் பக்கம் பார்க்க)

## "புலிக்கொடி ஏற்றுவோம்" எழுச்சி சுவரொட்டிகள்

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணப் பகுதிகளில் ஆனையிறவு எழுச்சி சுவரொட்டிகள் பல காணப்படுகின்றன.

ஆனையிறவை பிடித்து சிங்களவரின் ஆணவத்தை அடக்குவோம், உப்பிட்டவரை மறக்

[4-ம் பக்கம் பார்க்க]

## இந்தியவானொலிசெய்திக்கு விடுதலைப்புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்]
ராஜீவ் காந்தியின் கொலைக்கு தாங்கள் காரணம் என்று விடுதலைப்புலிகள் ஒப்புக்கொண்டு விட்டதாகவும் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவரிடம் இதனைக் கூறியதாகவும் இந்திய

(4-ம் பக்கம் பார்க்க)

### கட்டைக்காடு பகுதியில்

# தரை இறங்கிய படையினரை முன்னேறவிடாது தாக்குதல்!

## உயர் அதிகாரி உட்பட பல சிப்பாய்கள் பலி!!

(யாழ்ப்பாணம்)
**கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று பி. ப. 2-30 மணியளவில் தரையிறங்கி முன்னேற முயன்ற படையினரை இடைமறித்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தி வருகிறார்கள்.**

**நேற்றிரவுவரை நடைபெற்ற மோதலில் இராணுவத்தினர் தரப்பில் உயரதிகாரி ஒருவர் உட்பட பலர் கொல்லப்பட்டனர்.**

படையினருக்கு உதவியாக ஹெலிகொப்டர்கள், விமானங்களிலிருந்து புலிகளின் நிலைகளை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டபோதிலும் புலிகள் இடைவிடாது தாக்குதல்களை நடத்திவருகிறார்கள்.

புலிகளின் கடும் தாக்குதல்களினால் விமானங்கள் கீழே பறந்து தாக்கமுடியாத நிலையில் உயரத்திலிருந்து குண்டு மாரி பொழிந்தவண்ணமிருந்தன.

இங்கு இடம்பெற்ற சண்டையில் தரையிறங்கிய படையினர் பெரும் இழப்பை சந்தித்துள்ளதாகவும் பத்துக்கும் மேற்பட்ட படையினர் காணுமல் போய்விட்டதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பின்னர் தரையிறங்கிய படை

(4-ம் பக்கம் பார்க்க)

## 3,000 துருப்புக்கள் அனுப்பிவைப்பு!

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் இருக்கும் ஆனையிறவு இராணுவ முகாமை மீட்டெடுக்கும் நோக்குடன் 3,000

[4-ம் பக்கம் பார்க்க]

## ராணுவ ரீதியான வெற்றியை எதிர்பார்க்க முடியாது

### - 'இந்து' துணை ஆசிரியர்

(லண்டன்)
விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசபடைகளுக்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் இராணுவ ரீதியிலான வெற்றியை எதிர்பார்க்க முடியாது.

இந்து பத்திரிகையின் துணை ஆசிரியர் திரு என். ராம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும்தெரிவித்திருப்பதாவது

இருபகுதியினரும் ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொள்ளலாம், மோதலில் ஈடுபட்டுக் கொள்ளலாம். ஆனால் எதற்கும் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வே இறுதித் தீர்வாக இருக்கும்.

[4-ம் பக்க பார்க்க)

## புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவில் நடைபெறும் யுத்தத்தில் புலிகளின் தாக்குதலால் போர் விமானங்கள், ஹெலிகள் 5000 அடி உயரத்திற்கு கீழ் இறங்க முடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க]

### ஆட்லறி ஷெல் வீச்சு

## பல்கலை. விரிவுரையாளர் உடல் சிதறி மரணம்

(சாவகச்சேரி)
பலாலியிலிருந்து தென்மராட்சி நோக்கி நேற்று முன்தினம் இரவு நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ். பல்கலைக்கழக அரசியல் விரிவுரையாளர் கு. ரஞ்சகுமார் (27 வயது நுணாவில்) உடல் சிதறி பலியானார். நா. சிவசிதம்பரம் (55 வயது சங்கத்தானை) என்பவரும் இப்

(4ம் பக்கம் பார்க்க)

## "இது மிகப் பெரிய போர்" ராணுவ அதிகாரிகள் கருத்து

(கொழும்பு)
1987-ம் ஆண்டிற்குப் பின்னர் வடபிரதேசத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய போர் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காக தற்பொழுது நடைபெறும் சண்டை என்று கொழும்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு-கொம்படி வெளியில் நேற்றுக் காலை குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதலை நடத்தின.

(4-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவுப் பகுதியில் நேற்று பிரதான முகாம் பகுதியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகங்களை படையினர் மேற்கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலினால் எழுத்தாளர் குடும்பம் பலி

(வடமராட்சி)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலினால் பிரபல எழுத்தாளர் குடும்பம் பலியானது.

நேற்று முன்தினம் ஞாயிற்கிழமை இரவு 12-45 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து சரமாரியாக வடமராட்சிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் நெல்லியடியில்

[4ம் பக்கம் பார்க்க]

## நம்பிக்கை வாக்கெடுப்பில் நரசிம்மராவுக்கு வெற்றி

(புதுடில்லி)
இந்திய லோக சபையில் பிரதமர் நரசிம்மராவ் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றுள்ளது.

அரசுக்கு 241 வாக்குகள் ஆதரவாகவும் 112 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,

(4-ம் பக்கம் பார்க்க)

## பொம்மர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி கிழக்குப்பகுதியான வெற்றிலைக்கேணி, நாகர்கோயில் மணற்காடு போன்ற பகுதிகளில் பொம்மர் குண்டுவீச்சுக்களை குடிமனை பகுதிகளை நோக்கி மேற்கொண்டன.

கட்டைக்காட்டுப் பகுதியில்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சலவைத் தூள்

ஒன்றில் மூன்று அடங்கிய மில்க்வைற் சலவைத் தூள் கிடைத்திடும். அதிக நுரை கொடுத்திடும். அதிக சலவை தந்திடும். அதிக சிக்கனம். 50 கிறும் பக்கற் ரூபா 6/- மட்டுமே. 100 வெற்று உறைகளைத்தந்து அழகியகைலேஞ்சி ஒன்றைப் பெறுங்கள்.

(சி-1437)

## முதலுதவிவகுப்பு

கொழும்புத்துறை

சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் வலிகிழக்கு தென்மராட்சிப் பிரிவு அத்தியட்சகர் சோ. சத்தியேஸ்வரன் முதலுதவி வகுப்பு ஒன்றை மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பித்து வைத்தார்: -154

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் ஜூலை மாதத்துக்கான இரு கட்ட உலர்உணவு விநியோகம் மண்கும்பானிலுள்ள கிளைகள் மூலம் இன்றுதொடக்கம் வழங்கப்படும். (152)

## ஒரு சிங்களத் தாயின் உருக்கமான வேண்டுகோள்

(லண்டன்)

தனது ஒரே மகனை விடுதலை செய்துதருமாறு இலங்கையின் தென் பகுதியிலுள்ள தெனிப்பிட்டிய என்ற இடத்திலுள்ள ஒரு சிங்களத் தாய் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும், இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்து

(3-ம் பக்கம் பார்க்க]

## கோட்டக் கல்விப் பணிப்பாளர்

பருத்தித்துறை

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்: -52

## வீரவேங்கை நினைவாக வீதிக்கு பெயர்

பருத்தித்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வீரவேங்கை மேஜர் சோதிஜா ஞாபகார்த்தமாக கரவெட்டியில் வீதியொன்றிற்குப் பெயர்சூட்டப்பட்டுள்ளது. முன்னர் விக்னேஸ்வரா வீதி என அழைக்கப்பட்டுவந்த பிரதான வீதிக்கே ''மேஜர் சோதிஜாவீதி'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் நடைபெற்று வரும் யுத்தத்தில் வீரமரணமடைந்த 8 புலிப் போராளிகளின் புகழுடம்புகள் அரியாலையிலும், கொக்குவிலிலும் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இரவு 7 மணியளவில் 8 புகழுடம்புகளும் எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர்களின் மயானத்தில் 'தீயுடன் சங்கமமாயின. (56)

## போராளிகளுக்கு அஞ்சலி

(வட்டுக்கோட்டை)

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் ஈடுபட்டு வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வலிகாமம் மேற்குப் பிரிவில் உள்ள வீதிகள் வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ள தோடு தோரணங்களும் தொங்கவிடப்பட்டு வருகின்றன. - 139

# ஈராக்கிற்கு எதிராக மீண்டும் ஒரு'யுத்தம்

## நேச நாட்டுத் தலைவர்கள் எச்சரிக்கை

வாஷிங்டன்

ஈராக்கிற்கு எதிராக நேச நாட்டு படைகளின் தாக்குதலொன்று மீண்டும் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருகிறது.

ஈராக் அணு ஆயுதம் தயாரிக்க முயன்றாலோ, குர்திஷ் மக்களை கொடுமைப்படுத்தினாலோ அதன் மீது புதிய நேசப்படைத் தாக்குதல் நடாத்தப்படுமென அமெரிக்க அதிபர் திரு. புஷ்சும், பிரான்ஸ் அதிபர் திரு. மித்ரோனும் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் ஈராக்கின் அணுஆயுத உலைகளை நேரில் பார்வையிடச் சென்ற ஐ. நா. குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டு பின் அனுமதியளிக்கப்பட்டதும் தெரிந்ததே. -சி

## வெற்றிவேண்டி பிரார்த்தனை

(வட்டுக்கோட்டை)

ஆனையிறவு முகாம் தாக்குதல் வெற்றிபெறவும் போராளிகள் சுகமாகப் போரிடவும் வேண்டி வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, அராலிப்பகுதிகளில் உள்ள கோவில்களில் பொது மக்களால் வழிபாடுகள் நடாத்தப்பட்டுவருகின்றன.

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வட்டு. மேற்கு சின்னக்கதிர்காமம் கோவில், சித்தன்கேணி கலைநகர் கம்பம் புலோலி ஆதி வைரவர் கோவில் கலைநகர் பிராட்டிவளவு ஞான வைரவர் கோவில் முதலான பல கோவில்களில் இவ்வழிபாடுகள் நடாத்தப்பட்டன. (139)

## மந்திகையில் பிரான்ஸ் வைத்தியக் குழு

புலோலி

பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர். -61

## மகோற்சவம்

யாழ்ப்பாணம்

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை 17ம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பித்துதொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவிருக்கிறது. -153

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை குணம்

[செல்வரட்ணம்.சுரேஸ்குமார்]

| வீர ஜனனம்: | வீர மரணம்: |
|---|---|
| 15-04-1972 | 16-07-1990 |

மண்ணில் மலரும் மலரெல்லாம் மணப்பதில்லை
ஆனால் —
மண்மீட்பில் தியாகிக்கும் மாமலர்களென்றும்
மண்ணையும் விண்ணையும் மணக்க வைத்து
ஆயிர மாயிரம் அக்கினிப் பூக்களாய்
பாயிரம் பாடிப் பல்லாண்டு பாடிடுமே!
மாங்குள வேள்வியில் மாற்றான் தலைகொய்த
பாங்குயர் மாவீரன், பெருமைசால் தாவடி
வேங்கை யவன் 'குணம்' வேள்வித் தீயில்
வெந்தோ ராண்டு விடிந்து போனாலும்
இந்தமண் நாளை இருள்நீங்கி விடியும்
சொந்த மண்ணில் சுவர்க்கம் சுவாசிக்கும்
எந்தத் தடையும் இனிப்பொடிப் பொடியாகும்!

கவியாக்கம்: அநுமித்திரன்

குடும்பத்தினர், நண்பர்கள்.

தாவடி. (சி-4994)

# அன்னை பூபதி நினைவுப் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் கடந்த ஏப்ரல் மாதம் நடாத்திய அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப்போட்டியில் கொத்தணி ரீதியாக மேற்பிரிவு, கீழ்ப்பிரிவில் பரிசுபெற்றோர் விபரம்:

### யாழ். மாவட்டம்

| இல. | கொத்தணி | பெயர் | பாடசாலை | பிரிவு |
|---|---|---|---|---|
| 01. | சுன்னாகம் | க. சி. சிவாஜினி | கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை | கீழ்ப்பிரிவு |
| 02. | சுன்னாகம் | சி. சாயீஸ்வரன் | கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை | மேற்பிரிவு |
| 03. | மானிப்பாய் | சே. ரமேஸ் | மானிப்பாய் இந்துக்கல்லூரி | கீழ்ப்பிரிவு |
| 04. | மானிப்பாய் | சு. சரத்குமார் | மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை | மேற்பிரிவு |
| 05. | ஏழாலை | இ. பிரசாந்தன் | ஏழாலை மகாவித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 06. | ஏழாலை | செ. சுதாமதி | ஏழாலை மகாவித்தியாலயம் | மேற்பிரிவு |
| 07. | உடுவில் | ச. சதானந்தன் | நவாலி ம. வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 08. | உடுவில் | பூ. இலங்கேஸ்வரன் | இணுவில் சைவ மகாஜன | கீழ்ப்பிரிவு |
| 09. | உடுவில் | மே. யே. ரெறன்ஸ் | இணுவில் சைவ மகாஜன | கீழ்ப்பிரிவு |
| 10. | அச்சுவேலி | இ. காயத்திரி | அச்சுவேலி மகா வித்தி. | கீழ்ப்பிரிவு |
| 11. | அச்சுவேலி | நா. பாமினி | சரஸ்வதி வித்தியாலயம் | மேற்பிரிவு |
| 12. | கோப்பாய் | க. செந்தூர்பதிதா | கோப்பாய் மகாவித்தி. | கீழ்ப்பிரிவு |
| 13. | கோப்பாய் | ம. சுதன் | கோப்பாய் மகா வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 14. | கோப்பாய் | தி. மதிமோகன | கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி | மேற்பிரிவு |
| 15. | நீர்வேலி | த. ஜெயமாலா | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | கீழ்ப்பிரிவு |
| 16. | நீர்வேலி | பா. விஜயபாலா | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | மேற்பிரிவு |
| 17. | புத்தூர் | — | — | கீழ்ப்பிரிவு |
| 18. | புத்தூர் | கு. கிருபாகரமூர்த்தி | வாதரவத்தை ஸ்ரீ விக்கினேஸ்வரா | மேற்பிரிவு |
| 19. | உரும்பிராய் | ஜோ. மேரிகலைச்செல்வி | உரும்பிராய் இந்துக்கல்லூரி | கீழ்ப்பிரிவு |
| 20. | வசாவிளான் | கை. சீதாராமன் | வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 21. | வசாவிளான் | வே. ஸ்ரீகண்ணன் | வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம் | மேற்பிரிவு |
| 22. | யாழ்நகர் | இ. சிந்துஜா | யா/திருக்குடும்ப கன்னிர்மடம் | கீழ்ப்பிரிவு |
| 23. | யாழ்நகர் | வை. பிரபாகரன் | யா/மத்திய கல்லூரி | மேற்பிரிவு |
| 24. | குருநகர் | வி. ஜெயமலர் | சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை | கீழ்ப்பிரிவு |
| 25. | குருநகர் | ம. நிரஞ்சன் | சென். சாள்ஸ் மகாவித்தியாலயம் | மேற்பிரிவு |
| 26. | வண்ணார்பண்ணை தெற்கு | ம. சியாமளன் | வைத்தீஸ்வர வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 27. | வண். தெற்கு | ச. நளினி | வைத்தீஸ்வரவித்தியாலயம் | மேற்பிரிவு |
| 28. | கொக்குவில் | சா. பிரதீப்ஆனந் | கொக்குவில் இந்துக்கல்லூரி | கீழ்ப்பிரிவு |
| 29. | கொக்குவில் | து. சத்தியசீலன் | கொக்குவில் இந்துகல்லூரி | மேற்பிரிவு |
| 30. | நல்லூர் | இ. அனுசியா | யா/கனகரத்தின மகா வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 31. | நல்லூர் | ச. உதயச்சந்திரிகா | யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம் | மேற்பிரிவு |
| 32. | கோண்டாவில் | இ. குணசீலன் | கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் | கீழ்ப்பிரிவு |
| 33. | கோண்டாவில் | ப. செந்திற்செல்வி | மூத்துத்தம்பி வித்தியாலயம் | மேற்பிரிவு |
| 34. | வண்ணார்பண்ணை வடக்கு | ப. சௌரி | இந்துமகளிர் கல்லூரி | கீழ்ப்பிரிவு |
| 35. | வண். வடக்கு | ந. தேவிகா | இந்துமகளிர்கல்லூரி | மேற்பிரிவு |

(தொடரும்)

# வடபகுதிக்கு குறைந்தஅளவு உணவையே அரசு அனுப்புகிறது

(லண்டன்)

யாழ். குடா நாட்டுக்கு கடந்த மூன்று வருடகாலத்தில் அரைவாசிக்கும் குறைவான உணவு வகைகளே ஸ்ரீலங்கா அரசாங்கத்தினுல் அனுப்பப்பட்டன.

கொழும்பில் உணவுத் திணைக்கள வட்டாரங்களை ஆதாரங்காட்டி பி.பி.ஸியின் கொழும்பு முகவர் கிறிஸ் மொறிஸ் பி.பி.ஸிக்கு அனுப்பிய செய்திக் கடிதத்தில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

யாழ். குடாநாட்டிலுள்ள மக்களின் தேவைக்கென தேவைப்படும் உணவுத் தொகையில் அரைவாசிப் பகுதியையே ஸ்ரீலங்கா அரசு அங்கு கடந்த மூன்று வருடங்களாக அனுப்பிவருகிறது.

ஸ்ரீலங்கா அரசினுல் வட பகுதியில் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைக்கு மத்தியிலும் மற்றும் மின்சாரம், எரிபொருள் இல்லாத நிலையிலும் அத்தியாவசியஉணவுப்பொருட்கள் இல்லாதநிலையிலும் மக்கள் அங்கு பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ். குடா நாட்டிற்கு வாரந்தோறும் கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை அனுப்பிவைப்பதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவித்துவந்த போதிலும், உணவுத் திணைக்கள வட்டாரங்களின் தகவல்களின் அடிப்படையில் யாழ். குடாநாட்டுக்கு அரைவாசிக்கும் குறைவான உணவுப் பொருட்களே அனுப்பப்பட்டுள்ளன என அந்தசெய்திக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இராணுவ நடவடிக்கையால் கட்டைக்காடு, மருதங்கேணி மக்கள் இடம்பெயர்வு

(புலோலி)

வடமராட்சி கிழக்குப்பகுதியில் கடந்த 3 தினங்களாக நடைபெற்றுவந்த விமான, கடற்பீரங்கி, ஷெல் தாக்குதலினுல் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடுவரையிலான மக்கள் பருத்தித்துறை, குடத்தனை, அம்பன், நாகர்கோவில் ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கும்பொருட்டு செஞ்சிலுவைச் சங்கம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பனவிபரங்களை விபரங்களைத் திரட்டிவருகிறது. -61

## தரை இறங்கிய படையினர் முன்னேறமுடியாமல் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டைக் காட்டிலிருந்து தரையிறங்கிய படையினர் நேற்றுக்காலை வரை முன்னேற முடியாத நிலையில் அவ்விடத்தில் நிற்பதாகத் தகவல்கிடைத்துள்ளது.

அப்பகுதியில் சகல விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனையிறவு பிரதானமுகாமை முற்றுகைத் தகர்ப்பதற்காக அதிகாலை வரை புலிகள் உக்கிரத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

## அகதிகள் இடம்பெயர்வு

[புலோலி]

நாகர்கோவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதலினையடுத்து அங்கு இடம்பெயர்ந்து வந்தோர் வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றுவருகின்றனர். (61)

## ஒரு சிங்களத் தாய்

(2-ம் பக்கத் தொடர்ச்சி[

பி. பி. ஸி.க்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,-

எனது ஒரே மகன் எம். டபிள்யூ. பிரியந்தா என்பவர் 1990-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி நடைபெற்ற மாங்குளம், ஒட்டுசுட்டான தாக்குதல்களின்போது விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த 40 பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் ஒருவர்.

அவர் எனது ஒரே மகன் என்றகாரணத்தால் அவருக்கு ஏற்பட்ட இந்த நிலைமை எங்களைப் பெரிதாகப் பாதித்துள்ளது. நான் இன்று மனநோயாலும் மாருத நெஞ்சு வலியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

அரசியல் கைதிகளை பரிமாறிக்கொள்ளும் திட்டத்தின் கீழ் அல்லது வேறு சமாதான வழிகளின் அடிப்படையில் எனது மகனை விடுவித்துக் கொடுக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனிடமும், ஜனதிபதி திரு. பிரேமதாஸாவிடமும் உருக்கமாக வேண்டிக்கொள்கிறேன்.

## பீரங்கி, ஷெல் தாக்குதல்; பலர் 'காயமடைந்துள்ளனர்

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காட்டில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் அப்பகுதியில் பலர் காயமடைந்துள்ளதாகவும் சிலர் இறந்திருக்கலாமென்றும் ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காட்டுக் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகம் போன்றன இடம்பெற்றது. அப்போது காயமடைந்தவர்களில் ஒரு வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த செல்லையா செல்வராசா (55 வயது) என்பவரே எரிகுண்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவர். (56)

## வலது குறைந்தோர் பற்றி விபரம் சேகரிப்பு

பருத்தித்துறை

வடமராட்சிப்பகுதியிலுள்ள மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள வலது குறைந்தோர்பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்கான துரித நடவடிக்கைகளை வடமராட்சி வலதுகுறைந்தோர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

போறூட் நிறுவனம் தயாரித்து வழங்கிய விண்ணப்பப் படிவங்கள் மூலம் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்கள் ஊடாக இவ்விபரங்கள் திரட்டப்படவுள்ளது. பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள வலதுகுறைந்தோர் தத்தமது பகுதிக் கிராமசேவை அலுவலர்களிடம் இவ்விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு வடமராட்சி வலதுகுறைந்தோர் சங்கம் கேட்டுள்ளது. -52

## பொங்கிஎழுகின்ற போர்ப்பரணி!

தங்க மாமணித் தமிழ்சிலிர்த்தது!
''தம்பி'' என்றொரு புயல் வலுத்தது!
அங்க மேந்திடும் ஆயு தத்திலே,
ஆற்ற லோடுயர் அனல் பிறந்தது!
சிங்க மாமுகப் படை நடுங்கியே,
சீக்கி ரத்திலே தான்சு ருண்டது!
வங்க மாகடல் வாழ்த் தொலித்திடும்,
வகையி லேயதன் அலைதிரண்டது!

★

''சின்ன வயதெனச்'' சிலர் கனைத்ததும்;
''சிறுவர் வெல்வரோ?'' எனக் குரைத்ததும்;
''பின்ன முடியுமோ ஈழ ஆடையை?''
''பித்தமோ?'' எனப் பேச்செழுந்ததும்
கன்ன மிட்டிடுங் கள்வ ராயவர்,
காற்று வாக்கிலே கதையளந்ததும்;
தின்ன மட்டுமே பிறப்பெடுத்தவர்,
தீய வாழ்வினைத் தினமுரைக்குமே!!

- ஜெ. கி. ஜெயசீலன்

## இராசி பலன்

16 - 07 - 1991

செவ்வாய்க்கிழமை

பஞ்சமி பி. ப. 3. 41 வரை; பூரம் மு. ப. 10. 50 வரை இராகுகாலம் மாலை 3-00 மணி முதல் 4. 30 வரை, சுப நேரம் காலை 10 30 முதல் 12. 00 வரை; சித்தாமிர்த யோகம் ஸ்கந்தபஞ்சமி.

மேடம்:- மேலோர் நட்பு, குடும்பசுகம், பணவரவு.

இடபம்:- குடும் பபிரச்னை, தடுமாற்றம், வெறுப்பு,

மிதுனம்:- வீண்யோசனை, பழிதீர்த்தல் அலைச்சல்.

கடகம்;- காரியசித்தி, தொழில்லாபம், சகோதர உதவி,

சிங்கம்;- தொழில்பிரச்னை, தானதர்மம், குடும்பபிரிவு.

கன்னி:- அதிகாரிகள் பாராட்டு, நண்பர்கள் வருகை, வாக்கு வசீகரம்

துலாம்:- புத்திரர் கவலை, அந்நியவாசம், மனவெறுப்பு,

விருச்சிகம்:- விரும்பியதை அடைதல் பயணம், விருந்து.

தனுசு: சுபகாரிய செலவு நன்மதிப்பு, புதியமுயற்சி.

மகரம்:- கடன்சுமை, அகால போஜனம், மனைவியால்துயர்.

கும்பம்:- உடல் உபாதை, பிதாவழி துன்பம், கோப மிகுதி.

மீனம்:- பெரியவர் உதவி, குடும்பமகிழ்ச்சி, பொதுப்பணி.

- ஜோஸ்யர்

## நகரவீதி திருத்தம்

யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபையில் பல வீதிகள் செப்பனிடப்பட்டு வருகின்றன என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்பொழுது திருநெல்வேலி சிவன்கோவில் வீதியையும் பரமேஸ்வராச்சந்தி வீதியையும் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றார். -152

## பரியோவான் நிர்வாகத்தினம்

பண்டத்தரிப்பு

சர்வதேச ரீதியாகக்கொண்டாடப்பட்டுவரும் பரியோவான் நிர்வாகத்தினம் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் கிராமிய யாழ். மாவட்ட பிரிவினரால் முதல்தடவையாகக் கொண்டாடப்பட்டது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்ற இவ்வைபவத்துக்கு படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமைவகித்தார்.

உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் பதவிக்கான சீருடைபரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. --72

## 2ம் கட்ட உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் யூலை மாதத்துக்கான உலர் உணவு இரண்டாம் கட்ட விநியோகம் அதன்மண்கும்பான் கிளைகளில் இருந்து வழங்கப்படும். (152)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவ முகாமிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு நெல்லியான், பொன்னாலை, மூளாய், சுழிபுரம் நோக்கி பத்துக்கும் மேற்பட்ட 'ஷெல்'கள் ஏவப்பட்டன.

இரவு 12 மணியிலிருந்து ஆரம்பித்த தாக்குதல் அதிகாலை 2 மணிவரை நீடித்தது. [152]

## தெல். உ. அ. அதிபர் பிரிவு முதலாமிடம் பெற்றது

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற தடகளப் போட்டியில் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சகல போட்டிகளிலும் 26 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி சி. அண்ணாத்துரையினுல் ஒழுங்குசெய்யப்பட்ட இப்போட்டி கடந்த 6ம், 7ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. செ. இ. நித்தியராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இரண்டாவது இடத்தை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு 17 புள்ளிகளாலும், மூன்ருவது இடத்தை கோப்பாய் உ. அ. அ. பிரிவு 14 புள்ளிகளாலும், நான்காவது இடத்தை சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு 12 புள்ளிகளாலும் ஐந்தாவதுஇடத்தை பருத்தித்துறை, சங்கானை உடுவில் உ. அ. அ. பிரிவுகள் 5 புள்ளிகளாலும் வெற்றியீட்டின. [71]

## பொருட்களை இறக்கும் வேலையை கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்குமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக்கு கப்பல் மூலம் வரும் உலர் உணவுகளை இழுவை செய்யும் தொழிற்பாட்டை மீளவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வழங்க வேண்டும் எனக் கோரி வடமராட்சி கோட்ட கூட்டுறவு ஒன்றியம் யாழ். அரசாங்க அதிபர் பீ. மாணிக்கவாசகரை மகஜர் மூலம் கேட்டுள்ளது

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகள் உலர் உணவு விநியோகத்திட்டம் அமுல் நடாத்தப்பட்டகாலம் தொடக்கம் கப்பல் மூலம் பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்குமதி செய்யப்படும்போது தமது வாகனங்களை உபயோகித்து பொருட்கள் இழுவை செய்யப்பட்டுவந்தது. இவ்வாகனங்களுக்குரிய டீசல் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதைத் தவிர கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை. கொடுப்பனவுகளுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது.

பருத்தித்துறை இறங்குதுறை வடமராட்சிப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ளமையினுல் வடமராட்சியிலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் தத்தமது லொறிகளை கப்பல் மூலம் இறக்குமதி செய்யும் பொருட்களை இழுவை செய்துஅரச உணவுக் களஞ்சியங்களில் ஒப்படைப்பதற்கு வேண்டுதல் விடுக்கப்பட்டதற்கு உரிய மதிப்பளித்து அவ்வேலைகளை நிறைவு செய்துவரும் காலத்தில் திடீரென இத்தொழிற்பாட்டை தனியார்துறை வாகன உரிமையாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியுள்ளது கவலைக்குரியதாகும் எனவே இம்முடிவை மீள்பரிசீலனை செய்து வாகனங்களுக்குரிய ரயர், உதிரிப்பாகங்கள், டீசல் என்பனவற்றை வழங்குவதோடு இழுவை செய்யும் தொழிற்பாட்டை மீளவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வழங்க வேண்டும். (52)

# “பெரிய யுத்தம் நடத்துகிறோம் நிச்சயம் வெற்றிபெறுவோம்’

## களத்தில் நிற்கும் போராளி பேட்டி

(யாழ்ப்பாணம்)

''விடுதலைப் புலிகளின் வரலாற்றிலே என்றுமில்லாத வகையில் ஆனையிறவில் பெரிய பலத்தோடும், சக்தியோடும் மிகப்பெரிய யுத்தமொன்றை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதில் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம்'' என்று ஆனையிறவுப்பகுதியில் களத்தில் நின்று போராடும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;-

இப்பகுதியில் ஐந்து இராணுவ முகாம்களைச் சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்தினோம். முதலாவதாக உல்லாச விடுதி முகாம், அடுத்து உப்பள முகாம் என படிப்படியாக முன்னேறி எதிரியை நெருக்கிக்கொண்டிருக்கிறோம்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து பல திட்டம் போட்டு இந்த முற்றுகையை உடைக்க பிரயத்தனம் செய்துவரும் இந்த வேளையில் எமது வீரர்கள் தீரமுடன் போராடி வருகிறார்கள்.

ஆனையிறவில் பெரியதொரு சண்டை நடைபெறுகிறது என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த யுத்தத்தில் இழப்புகள் பல ஏற்பட்டாலும் விடாது போராடி வெற்றிக் கொடி நாட்டியே தீருவோம்.

இன்று யுத்தத்தில் நாம் உயர்ந்து நிற்கிறோம். நம்பிக்கையோடும்தான் எமது போராளிகள் வீரமரணமடைகின்றனர். அவர்களது தாகத்தையும் நம்பிக்கையையும் தீர்க்க வெற்றி பெற்றே தீருவோம்.

## பல்கலைக்கழக மாணவர் இரத்ததானம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 50 மாணவர்கள் கடந்த சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தார்கள்.

இரத்ததானம் செய்வதற்கு மேலும் 200பேர் தமது பெயர்களை பதிவு செய்துள்ளனர்.

மேலும் காயமடைந்துள்ள போராளிகளை பராமரிப்பதற்காக தினமும் 120 மாணவர்கள் ஈடுபடவுள்ளனர்.

### புலிகளிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு யுத்தம் ஆரம்பித்த முதல் நாள் யுத்தத்திலேயே இரு ஹெலிகள் பலத்த சேதமடைந்து தற்போது பலாலி முகாமில் நிற்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

### நம்பிக்கை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெலுங்கு தேச கட்சி, போவட்புளொக் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

பி. ஜே. பி.யும், ஜனதா தளமும் எதிர்த்து வாக்களிக்க, இந்திய முஸ்லிம் லீக்கும், அ. தி. மு. க.வும் ஆதரித்து வாக்களித்தன. (பூ)

### ஆட்லறி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பலியானார்.

இரவு முழுதும் மேற்கொள்ளப்பட்ட தீவிர ஷெல் தாக்குதலில் க. இராசரட்ணம், சி. கார்த்திக், பொ. சண்முகம், க. சுமுத்திரா, த. கணகேஸ்வரி, எஸ். உதயகுமார் உட்பட பலர் படு காயமடைந்ததுடன், வீடுகளும் சேதமடைந்தன. (155)

### ஷெல் தாக்குதலினால்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல சிறுகதை எழுத்தாளரும், ஈழநாடு முன்னாள் நிருபருமான நெல்லைக் க. பேரம்பலம் (42 வயது), அவரது மனைவி பே. உமாவதி (35 வயது), மகன் பே. உமாசங்கர் [16 வயது], மகள் பே. சர்மிளா (07 வயது) ஆகிய நால்வரும் ஷெல் விழுந்து மரணமானார்கள்.

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி இலக்கணாவத்தை, நாவலடி, கொற்றாவத்தை போன்ற இடங்களில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்தன. (56- 51- 61)

### சுண்டுக்குளி - பரியோவான் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்]

யாழ். பரியோவான் கல்லூரி சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகளைச் சேர்ந்த ஆண்டு 10 இற்கு மேற்பட்ட மாணவ மாணவிகளை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் பாடசாலையில் கூடுமாறு இப்பாடசாலைகளின் அதிபர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

### லியோ கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழக அங்கத்தவர்கள் இன்று காலை 8-30 மணிக்கு பாடசாலையில் தவறாது சமூகம் அளிக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

### இன்ரறக்ட் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பரியோவான் கல்லூரி இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுக்கான கூட்டம் காலை 9-00 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### உணவுப் பங்கீடு மாநாடு

[யாழ்ப்பாணம்]

உணவுப் பங்கீடு சம்பந்தமான கூட்டுறவு மாநாடு நாளை புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு யாழ்ப்பாணம் மணியம் கட்டிடத்தில் உள்ள தேசிய கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

இம்மாவட்டத்திற்கு யாழ் மாவட்டத்திலுள்ள சகல ப. நோ. கூ. சங்க தலைவர்களும், பொதுமுகாமையாளர்களும், சங்கங்களுக்குப் பொறுப்பான பிராந்திய கூட்டுறவுப் பரிசோதகர்கள் கூட்டுறவுப் பரிசோதகர்கள், ஆகிய அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

### கட்டைக்காடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யினர் புலிகளின் கடும்தாக்குதலினால் நிலைகுலைந்து முன்னேற முடியாததொரு நிலையில் பலத்த இழப்புக்களுடன் அங்கு நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்தும் புலிகளின் தாக்குதலில் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டும் வருவதாக செய்திகள் தெரிவித்தன. [சி-56-வி]

### கஷ்ட நிவாரணப் ப்டி

மானிப்பாய்)

யாழ். செயலக ஊழியர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை 8-ம் திகதி முதல் கஷ்டநிவாரணப்படி பணமாக வழங்கப்பட்டு வருகின்றது

இந்த நிவாரணப் பணம் கடந்த 1988-ம் ஆண்டு முதல், 1990 யூன் வரையுள்ள 18 மாத காலத்திற்கு வழங்கப்பட்டது.

செயலக ஊழியர்களுக்கு 1990 யூலை முதல் டிசம்பர் வரையுள்ள ஆறு மாதங்களுக்கு கஷ்ட நிவாரணம் ஏற்கனவே பணமாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [71]

### நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

செம்பியன்பற்று, கட்டைக்காடு போன்றபகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகளுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிவாரணம் வழங்கிவருகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெரும்பாலானவர்கள் மேற்படி இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளது தெரிந்ததே. (க)

### ராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கும் ஒரு யுக்தியாகவே தற்போது இடம்பெற்றுவரும் மோதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறலாம்.

வெகுவிரைவில் இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குவரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடும். இராணுவத்தீர்வையோ அல்லது இராணுவ வெற்றியையோ இதில் எதிர்பார்த்திருக்க முடியாது.

### புலிக்கொடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சிங்களவர் உப்பளத்தை என்றும் மறவான், ஆனையிறவில் சிங்களம் அழியும் புலிக்கொடி ஏறும், சிங்களவரை அழித்து புலிக்கொடி ஏற்றுவோம் போன்ற வாசகங்கள் காணப்படுகின்றன. (59)

### ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றிவிட முடியாது என்று கொழும்பில் இராணுவ அதிகாரி தெரிவித்தபோதும் அப்பகுதியில் கடல்மார்க்கமாக இராணுவத்தினரை இறக்க முயற்சிசெய்வதும் அப்பகுதியை நோக்கி பெருந் தொகையான படையினர் அனுப்பப்படுவதும் விடுதலைப் புலிகளின் நெருக்குதலில் அவர்களிடம் விழக்கூடிய நிலையில் இராணுவ முகாம் இருப்பதை காட்டுகிறது.

## நரசிம்மராவ் ஜெயலலிதா இன்று சந்திப்பு

(புதுடில்லி)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இன்று இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அவர் இந்தியப் பிரதமருடன் விரிவாகப்பேசுவார்.

நேற்றிரவு செல்வி ஜெயலலிதா புதுடில்லி வந்துசேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

### இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி தெரிவித்த செய்திக்கு விடுதலைப்புலிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் கொலைக்கும் தமக்கும் எவ்வித சம்மதமும் இல்லையென்று புலிகள் அதிகாரபூர்வமாக மறுப்பு தெரிவித்தபோதும் ஆதாரம் எதுவுமின்றி பொறுப்பற்ற முறையில் வீண்பழி சுமத்த வேண்டாம் என்றும் புலிகள் கண்டித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளை ராஜீவ் கொலை சம்பவத்துடன் தொடர்புபடுத்தி இந்திய வானொலி விஷமத்தனமான பொய்பிரசாரம்மேற்கொண்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

### இதுமிகப்பெரிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவுசண்டைதொடர்பாக பி. ரி ஐ. செய்தியாளரிடம் மேற்படி தமது கருத்தை இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச்சண்டையில் எண்ணூறுக்குமதிகமான படையினர்கள் ஈடுபட்டுள்ளதுடன் அநுராதபுரம் விமானத்தளத்தைச் சேர்ந்த போர் விமானங்களும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் கூறினர். [பூ]

### 3000 துருப்புக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துருப்புக்கள் அனுப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ தலைமையகத்திலிருந்து இரண்டு படைப்பிரிவுகளை உள்ளடக்கிய மூவாயிரம் துருப்பினர் வடபகுதிக்கு அனுப்பப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

கஜபாகு பிரிவு, சிங்கள ரெஜிமன்ட் பிரிவு, காலாட் படைப்பிரிவு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த துருப்பினரே அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் இந்தப் படைப்பிரிவைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டதாகவும், 18 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

### சோனியா குடும்பத்துக்கு பாதுகாப்பு

(புதுடில்லி)

திருமதி சோனியா காந்திக்கும் அவரது பிள்ளைகளுக்கும் அரசு தகுந்த பாதுகாப்பு வழங்குமென்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தெரிவித்தார். தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, திரு. வாழப்பாடி ராமமூர்த்தியின் பாதுகாப்பு குறித்தும் திரு. சவான் பிரஸ்தாபித்தார். [சி]

### பொலிஸார் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடா பகுதியில் பொலிஸ் காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு பொலிசார் காயமடைந்தனர்.

### தேடப்பட்டவர் சரணடைந்தார்

[சென்னை]

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக மத்திய புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபரான வேதாரணியத்தைச் சேர்ந்த எம். சண்முகம் நேற்று தஞ்சாவூரில் பொலிஸில் சரணடைந்தார். (பூ)

### துப்பாக்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவீச்சு விமானங்கள் முகாமைச்சுற்றி பறந்தவண்ணமிருந்தன. [56]

### இளைஞர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதியில் நின்ற இளைஞர் ஒருவர் இதனால் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மந்துவில் கிழக்கு இ. முருகமூர்த்தி (22 வயது) என்பவரே காயமடைந்தவராவார். (56)

### பொம்மர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரித்து நிற்கும் பீரங்கிப்படகிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (56)

## மரண அறிவித்தல்

### அல்பிரட் பிரான்சிஸ் ராசு

[ஓய்வுபெற்ற P. W. D. களஞ்சியப் பொறுப்பாளர்]

A. F. ராசு 15-7-91 காலமாகிவிட்டார். அன்னார் தேவநேசம் குணரத்தினத்தின் அன்புக் கணவரும், லூர்த்து பாலச்சந்திரன், றீற்றா சிவஞானம் (ஜேர்மனி), ஜேராணி இம்மனுவல் (ஜேர்மனி), ஜெறீம் டெக்ஸர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலச்சந்திரன் (பட்டயக் கணக்காளர், கொழும்பு), சிவஞானம் (ஜேர்மனி), இம்மனுவல் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-7-91) பிற்பகல் 4 மணிக்கு இல. 136, பழைய பூங்கா வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக யாழ். ஆசனக்கோவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

136, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம். (எ-1438)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81